ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய: ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீமத் வரத குரவே நம:

# ஸ்ரீப்ரதிவாதி பயங்கரம் அண்ணா – வருஷதிருட்சத்திரம் - ஆடி – பூசம்



திருத்தண்கா விளக்கொளிப் பெருமாள் (தீபப்ரகாசர்), காஞ்சீபுரம்
ஸ்ரீ அண்ணாவின் அவதாரஸ்தல எம்பெருமான்

புகைப்பட உதவி - ஸ்ரீ முசரவாக்கம் கேசவ பாஷ்யம் ஸ்வாமி

## தனியன்

கர்க்கடே புஷ்யஸஞ்ஜாதம் வாதிபீகரமாஸ்ரயே /
வேதாந்தாசார்ய ஸச்சிஷ்யம் வரயோகி பதாஸ்ரிதம் //

வேதாந்ததேஸிக கடாக்ஷ விவ்ருத்தபோதம்
காந்தோபயந்த்ருயமிந: கருணைகபாத்ரம் /
வத்ஸாந்வவாயம நவத்யகுணைருபேதம்
பக்த்யா பஜாமி பரவாதிபயங்கரார்யம் //



ஸ்ரீ அண்ணா, காஞ்சீபுரம்



ஸ்ரீ அண்ணா, திருநாங்கூர்

புகைப்பட உதவி - ஸ்ரீ S கல்யாணரெங்கன் ஸ்வாமி, திருநகரி



ஸ்ரீ அண்ணா, திருப்பதி

புகைப்பட உதவி - ஸ்ரீ Dr P.B.ரகு ஸ்வாமி

வாழித்திருநாமம்

மன்னுபுகழ் மணவாள முனிக்கன்பன் வாழியே
மாறன் சடகோமன்மொழி வழுவாதான் வாழியே
அன்றையிலும் அடைந்தவர்பால் அருளுடையோன் வாழியே
அடைவுடனே வேதாந்தம் அறிந்துரைத்தான் வாழியே
என்னையுந்தன் இன்னருளால் எடுத்தளித்தான் வாழியே
இரண்டுலகும் தன்புகழை யேத்துமவன் வாழியே
பன்னுகலை ஆழ்வார்கள் பதமுடையோன் வாழியே
பரவாதி பயங்கரனார் படியிலென்றும் வாழியே.

*<u>இவர் அருளியுள்ள சாத்துமுறை பாசுரம்</u>
(மாமுனிகளின் வடிவழகை எடுத்து இயம்புவதாக அமைந்துள்ளது)

செய்யதாமரைத்தாளிணை வாழியே
சேலைவாழி திருநாபி வாழியே
துய்யமார்பும் புரிநூலும் வாழியே
சுந்தரத்திருத்தோளிணை வாழியே
கையுமேந்தியமுக்கோலும் வாழியே
கருணைபொங்கிய கண்ணிணை வாழியே
பொய்யிலாத மணவாளமாமுனி
புந்திவாழிபுகழ்வாழிவாழியே.

அடியார்கள்வாழ அரங்கநகர்வாழ
சடகோபன்தண்தமிழ்நூல்வாழ - கடல்சூழ்ந்த
மன்னுலகம்வாழ. மணவாளமாமுனியே
இன்னும்ஒருநூற்றாண்டுஇரும்.

*இந்த வாழித்திருநாமமே எல்லா திருக்கோயில்களிலும் சாத்துமுறையின் போது அனுசந்திக்கப்படுகிறது.

திருஅவதாரஸ்தலம் - திருத்தண்கா விளக்கொளிப் பெருமாள் (தீபப்ரகாசர்)
எழுந்தருளியள்ள ஸ்ரீகாஞ்சீபுர திவ்ய தேசம்
திருநாமம் - ஸ்ரீஹஸ்திகிரி நாதரண்ணா
இவர் மாமுனிகள் ஏற்படுத்திய அஷ்டதிக்கஜங்களில் ஒருவர். முடும்பை வம்ஸம்
ஆசாரியன் - ஸ்ரீ மாணவாள மாமுனிகள்
சிஷ்யர்கள் - குமாரார் அண்ணனப்பா, அநந்தாசார்யர், அழகிய மணவாளப்பெருமாள் நாயனார்

<u>இவர் அருளிச்செய்துள்ள க்ரந்தங்கள்</u> : ஸ்ரீபாஷ்யம், ஸ்ரீபாகவதம், ஸுபாலோபநிஷத்து, அஷ்டஸ்லோகி, யதிராஜவிம்ஸதி இவற்றக்கு ஸங்கரஹப்படி வ்யாக்யாநமும், நூற்றெட்டுத்திருப்பதி எம்பெருமான்கள் விஷயமான ஸுப்ரபாதம், ப்ரபத்தி, மங்களாஸாஸந ஸ்தோத்ரங்களும், ஸ்ரீக்ருஷ்ண மங்களமும், ப்ரபத்தியோக காரிகைகளும், ப்ராசார்ய ஸப்த்தி ரத்ந மாலையும், வரவரமுநிஸதகமும் (ஜீயர்படியைத் தழுவியது), நித்யாராதந விதியும், விஜயத்வஜமும், செய்யதாமரைத்தாளினை வாழியே* இத்யாதி ஜீயர் வாழித்திருநாமம், இருபது வார்த்தையும், பெரியஜீயர் விஷயமான பாதாதி கேஸாந்தமாலை ப்ரபந்தமும், வ்ருத்திஸ்தவம் முதலான திவ்ய க்ரந்தங்களையும் அருளிச் செய்துள்ளார். மாமுனிகள் அண்ணா அருளிய ஸ்ரீவேங்கடேச ஸுப்ரபாதம், ப்ரபத்தி, மங்களம் ஆகியவற்றை திருமலையில் திருபள்ளியெழுச்சி காலத்தில் அனைவரும் நியமேந அநுஸந்த்திக்கவேண்டும் என்று நியமித்தருளினார். இதை முக்யமாகக் கொண்டு இன்றளவும் திருமலையில் நிறைவேற்றி வருகின்றனர்.

## ஸ்ரீப்ரதிவாதிபயங்கரம் அண்ணாவின் அவதார மகிமை

இவர் 74 சிம்மாசனாதிபதிகளில் ஒருவரான முடும்பை நம்பியின் வம்சத்தில் ஆடி மாதம் பூச நட்சத்திரத்தில் திருத்தண்கா விளக்கொளிப் பெருமாள் (தீபப்ரகாசர்) எழுந்தருளியள்ள ஸ்ரீகாஞ்சீபுர திவ்ய தேசத்தில் அவதரித்தார். இவர் பிறந்த புத்ர ரத்நத்தை நோக்கிப் பெரியோர்கள் அனைவரும் பேரருளாளனே இங்கு திருவவதாரம் செய்தனன் போலும் என்றும் ஸ்ரீகூரத்தாழ்வானே மறுபடியும் அவதாரம் செய்தார் போலும் என்றும் பேசி மகிழ்ந்தனர்.

இவர் வாழ்ந்த நாட்கள் 93 ஆண்டுகளும் ஏறக்குறைய 8 மாதங்களும் ஆகும். பிங்கள வருஷத்தில் அவதரித்த ஸ்வாமி எம்பெருமானாருக்கு ஏழு வருஷம் முன்பே ஸௌம்ய வருஷத்தில் அவதரித்து அவருக்கு சிஷ்யராக இருந்த கூரத்தாழ்வானைப் போல் **இவ்வண்ணாவும் மணவாளமாமுனிக்கு ஒன்பது வருஷங்கள் முன்பே பிலவ வருஷத்தில் அவதரித்து அவருக்குச் சிஷ்யரானார்.**

இங்ஙனமே நம்மாழ்வார் அவதரிப்பதற்கு முன்பே அவதரித்து பின்பு அவருக்குச் சிஷ்யராகி அவர் திருநாட்டுக்கு எழுந்தருளின பிறகும் அவர் அருளிய திருவாய்மொழி முதலிய திவ்யப்ரபந்தங்களை ப்ரவசனம் செய்து கொண்டிருந்து பிறகு திருநாட்டுக்கு எழுந்தருளின **மதுரகவியாழ்வாரைப்போல்,** இவ்வண்ணாவும் மாமுனிகளுக்கு முன்பே அவதரித்து அவர் திருநாட்டுக்கு எழுந்தருளன ருதிரோத்காரி வருஷத்திற்குப்பின்பும் அவர் அருளிய க்ரந்தங்களைப் ப்ரவசனம் செய்து கொண்டும், தேவுமத்தரியாது மாமுனிகளையே த்யானித்துக் கொண்டும், 10 வருஷங்கள் எழுந்தருளி இருந்து ஸ்ரீமுக வருஷத்தில் திரு நாட்டுக்கு எழுந்தருளினார்.

## திருமலை தோழப்பர் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணாவை திருமலையில் திருமஞ்சன கைங்கர்யம் செய்ய நியமித்தல்

ஹஸ்திகிரிநாதர் அண்ணா சில வருட காலம் பெருமாள் கோயிலிலே கைங்கர்யம் செய்த பிறகு பேரருளாளன் நியமநப்படி திருமலைக்கு எழுந்தருளினார். அங்கு வாசம் செய்த காலத்தில் அவருக்கு மூன்று திருக்குமாரர்கள் திருவவதரித்து அவர்கள் அதிமேதாவிகளாகப் பிரகாசித்து வந்தனர். அவருடைய தேவிகள் கூரத்து ஆண்டாளோடு ஒத்த ஞானமுடையவளாய் விளங்கிவந்தார்.

இப்படியிருக்கிற காலத்தில் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா கூரத்தாழ்வானைப்போல ப்ராப்ய விரோதி என்று ஐச்வர்யத்தில் வெறுப்புற்று கைங்கர்யமே புருஷார்த்தம் என்று அறுதியிட்டு திருவேங்கடமுடையானுக்கு ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமைகள் செய்து வந்தார்.

அவருடைய கைங்கர்யங்களை திருமலை தோழப்பர் உகந்தருளினார். அவரைத் திருமஞ்சன கைங்கர்யம் செய்ய நியமிக்க விரும்பினார்.

ஜநார்த்தநனாகிய கண்ணபிரான் பூர்ணகும்பமோ, திருவடி விளக்குதலோ, குசலப்ரச்நமோ இவற்றில் ஒன்றைத் தவிர வேறு ஒன்றையும் ஆசைப்படமாட்டான் என்று கூறிக்கொண்டே வெள்ளிக் குடத்தைக் கையிலே கொடுத்து ஆகாசகங்கையிலிருந்து திருமஞ்சனம் கொண்டு வந்து பூர்ணமாக ஏலா லவங்க குஸமாதிகளாலே பரிமளமூட்டி நீரே எம்பெருமானுக்கு ஸமர்ப்பித்து வாரும் என்று திருமலை தோழப்பர் அண்ணாவை நியமித்தார்.

அண்ணா நாயன்தே! நாயன்தே! என்று அங்கீகரித்துக் கொண்டே குடத்தை வாங்கிக் கொண்டு மிகவும் மகிழ்ச்சி கொண்டவராய் இவ்வளவாகிலும் கைங்கரியம் கிடைத்து சேஷத்வம் சித்திக்கப் பெற்றதே! என்று நினைத்து நித்தியம் அந்தத் திருமஞ்சன கைங்கரியத்தில் அந்வயித்து வந்தார்.

ஒரு நாள் ஒரு ஸ்ரீவைஷ்ணவர் திருவரங்க மாநகரிலிருந்து திருமலை அப்பனை சேவிக்க வந்து நின்றார். அண்ணா அவரை சேவிக்கப் பண்ணி வைத்து தீர்த்தப்பிரசாதங்கள் அளிக்கச்செய்து அவருக்குத் தாமும் ஸத்காரங்கள் செய்து அன்று முழுதும் அவரைத் தம் அருகில் வைத்துக்கொண்டு கோயில் விருத்தாந்தங்களையும் பெரியபொருமாள் அமுது செய்கிற வரிசைகளையும் உத்ஸவங்களையும் பெரிய ஜீயருடைய இனையில்லாத வைபத்தையும் கேட்டுக் கொண்டு இருந்தார். மறுநாள் தாம் திருமஞ்சனத்துக்கு எழுந்தருளுகிற போது அவரையும் கூட்டிக்கொண்டு மணவாளமாமுனியினுடைய அன்றாட அநுஷ்டானங்களையும் அதிஅற்புதமான வைபவங்களையும் சொல்லும் என்று அதே சிந்தனையுடன் திருமஞ்சனம் கொண்டு வந்து ஏலாலவங்க கர்ப்பூராதிகளை பரிமாறுவதற்காகத் குடத்தை திரக்க, அப்போது ஒரு ஏகாங்கி ஓடிவந்து திருவாராதந காலம் கடந்துவிட்டதால் அக்குடத்தை பலாத் காரமாக வாங்கி எடுத்துக் கொண்டு திருவாராதன சமயத்துக்கு உதவ வேணும் என்று சடக்கெனக் கோயிலுக்குள் கொண்டு போனார்.

திருமஞ்சன திரவியங்கள் இன்னும் பரிமாறவில்லையே! என்ற இவர் சொல்ல, அதை அவர் கேளாமல் கொண்டு போய் ஸமர்ப்பிக்க, எப்போதும் போல் திருவேங்கடமுடையான் திரு வாராதனம் கண்டருள, அண்ணா அபராதம் வந்ததே என்று, ஏலாதிகளை வட்டிலிலே கொண்டு நிற்க, அர்ச்சகர் பரவசராகி இத்தனை நாட்களைக் காட்டிலும் பரிமள திரவியங்கள் விஞ்சி திருமஞ்சன வாசனை மிகுந்திருக்கிறதே! என்றதும், அண்ணா அதற்கு இது வெறுமனன்று உகப்பு விஞ்சியிருக்கிறது. இதற்குக் காரணம் இன்று பெரியஜீயருடைய வைபவ ச்ரவணமேயாக வேணும் என்றார். அந்த ஸ்ரீவைஷ்ணவரை அழைத்து நீர் மணவாளமாமுனி வைபவமான ஐதிஷ்ங்களை அருளிச் செய்ய அடியேன் கேட்டபடியால் கைம்மேல் பலன் கூடியது. அப்பன் திருவுள்ளம் மகிழ்ச்சியோடிருக்கிறார். உடனே மணவாளமாமுனியை ஸேவிக்க வேணும் என்றதும் திருமலை அப்பனும் ஸத்கரித்து விடை கொடுத்து அனுப்பியருளினார்.

பின்பு பிரதிவாதி பயங்கரம் அண்ணனும் சில தினங்கள் திருமஞ்சன கைங்கரியத்தில் ஈடுபட்டிருந்து திருவேங்கடவனுடைய நியமனத்தைப் பெற்று குடுப்பத்துடன் திருவரங்கத்துக்குப் புறப்பட்டார். பயணவழிகளில் எங்கும் தங்காது மிக விரைவாகக் திருவரங்க மாநகரைச் சென்று அடைந்தார்.

## ப்ரதிவாதி பயங்கரம் அண்ணா மாமுனிகளை ஆச்ரயித்தல்

திவ்யமான திருவரங்கம் திருப்பதியை வைத்தகண் வாங்காது ஸேவித்தார். திருக்காவேரியில் மகிழ்ச்சியுடன் நீராடினார். பன்னிருதிருமண்காப்பு பிரகாசமாக தரித்துக் கொண்டார். ஸந்த்யாவந்தனாதி நித்யகர்மாநுஷ்டானங்களையும் முடித்துக் கொண்டு நேராக ஸ்ரீரங்கநாராயணஜீயர் மடத்துக்கு எழுந்தருளினார். ஸ்ரீரங்கநாராயண ஜீயரைப் புருஷகாரமாகக் கொண்டு பெரிபெருமாளை மங்களாசாஸனம் பண்ண கோயிலுக்கு எழுந்தருளினார்.

சேவா க்ரமத்தில் சந்நிகளுக்குச் சென்று வணங்கினார். அந்த சந்தர்ப்பத்தில் கோயிலினுள் சித்ர மண்டபத்தில் பெரிய ஜீயர் கோஷ்டியாக எழுந்தருளியிருப்பதை சேவித்தார்.

பெரியஜீயர் அப்பொழுது ஒன்றும் தேவும் உலகும் உயிரும் மற்றும் யாதுமல்லா அன்று (4ஆம் பத்து 10ஆம் திருவாய்மொழி முதல் பாசுரம்) என்னும் திருவாய்மொழியின் பிரவேசத்தை விரித்து உபந்யசித்துக் கொண்டிருந்தார். அந்த கோஷ்டியைக் கண்ணுற்றதும் மகிழ்ச்சி பொங்க அண்ணா தண்டன் ஸமர்ப்பித்து நின்றார். பெரியஜீயர் தமது திருக்கண்களால் அவரைக் குளிர நோக்கினார். **வாரீர்! பிரதிவாதி பயங்கரம் அண்ணா!** என்று தம் இனிய குரலால் அவரை அழைத்துக் குசலம் விசாரித்து **இத்தனை நாள்களுக்குப் பிறகாவது உம்மை இன்று சேவிக்கப் பெற்றேன்** என்று அவரைத் தழுவிக் கொண்டு அவரையும் அருகில் அமரச் செய்து காலசேஷபம் தொடர்ந்து நடத்தி நான்காவது பாசுரத்தில் நிறுத்தினார். அவ்வளவில் பிரதிவாதி பயங்கரம் அண்ணா இப்படி ஆழ்வார் பரத்வ நிர்ணயம் பண்ணி அருளிச் செய்த விஷயங்களை தேவரீர் திருவடிகளிலே ஸம்பந்தம் உண்டானால் அல்லது யார்க்கும் அறிந்து கொள்ள முடியாது என்று போற்றினார்.

மணவாள மாமுனிகள் அவருடைய திருக்கைகளைப் பிடித்துக்கொண்டு பெரிய பெருமாளைத் திருவடி தொழச்சென்றார். பெருமாளும் தீர்த்தம் ஸ்ரீசடகோபன் முதலான மரியாதைகளைச் செய்து கௌரவித்தார். அப்போது பெரிய பெருமாள் ஆர்ச்சகமுகேன வாரீர் பிரதிவாதி பயங்கராசாரியரே ! திருமலையிலே மிக்க ஆதரத்துடன் திருமஞ்சன கைங்கரியம் பண்ணினீரே! ஒரு நாள் திருமஞ்னம் கொண்டு வரும்பொழுது நம் அழகிய மணவாளமாமுனியின் வைபவம் கேட்டுக் கொண்டு வர அதனாலேயே தீர்த்தம் சுத்தியும் பரிமளத்தின் மிகுதியையும் பெற்றது. நாம் உகந்தபடியை நினைத்து வந்தீர் அன்றோ! உமக்கு விலசஷண சம்பந்தம் தருகிறோம் இன்று என்று பெரிய ஜீயர் திருக்கையிலே அண்ணாவை ஒப்படைத்தருளினார்.

பெரிய ஜீயர் அண்ணாவை அழைத்துக் கொண்டு மடத்திற்கு எழுந்தருளினார். அண்ணாவின் மனத்தில் பெரிய ஜீயரின் உபந்யாசம் ஆழப் பதிந்து ஒலிந்துக் கொண்டிருந்தது. திருவாய்மொழியிலும் அருளிச்செயலிலும் தவிர ஸம்ஸ்க்ருத சாஸ்திரங்களில் இவருக்கு பரிசயம் இல்லை என்று கேள்விப்பட்டுருந்தோம். இவர் உபயவேதாந்தத்திலும் அதிநிபுணராயிருப்பதை அன்று தெரிந்து கொண்டோம் என்று சிந்தித்தார். அடியேனை ஆட்கொண்டு அருள்பாலிக்க வேண்டும் என்று மனமிரங்கும்படி ஜீயரிடம் பிரார்த்தித்தார். ஜீயர் அவரைப் பார்த்து **நீர் பிரதிவாதி பயங்கரர், நாம் ஸாது. எப்படிச் சேர்வது?** என்று கேட்டார். உடனே அண்ணா ஜீயரிடம் மிகவும் பணிவு தோன்றச் சொன்னார்.

ப்ரஸித்த: பரகோஷ்டீஷு ப்ரதிவாதி பயங்கர:
ஸ்ரீவைஷ்ணவாநாம் கோஷ்டுஷு தத் தாஸஇதிவிச்ருத:

என்று அடியேனுக்கு இரண்டு பிரசித்திகள் உண்டு என்றார்.

பெரியஜீயரும் அவர் திருவுள்ளத்தை அறிந்து மிக்க பூரிப்படைந்து. அடுத்தசஷணமே அவருக்கு பஞ்ச ஸம்ஸ்காரங்களையும் பிரஷாதித்துப் பலபடியாய் பாராட்டியருளினார். **அடியார்க்கு என்னை ஆட்படுத்த விமலன்** என்று திருபாணாழ்வார் சொல்லியபடி ஸ்ரீவைஷ்ணவ தாஸன் என்று அதுவரை யாருக்கும் ஸித்திக்காத தாஸ்ய நாமத்தை ப்ரஸாதித்து ததீய சேஷத்வமே (அடியார்க்கு

அடிமைப்பட்டிருத்தல்) ஆத்மாவுக்கு அடையாளம் என்பதைக் காட்டியருளினார். மேலும் அவரிடம் இதர மதக் கோட்பாடுகளை ப்ரமாண பூர்வமாக விலக்கி விசிஷ்டாத்வைத மதத்தை வேரூன்றப் பண்ணி நம் ஸித்தாந்தத்தை ரசஷித்து வாரும் என்று நியமித்தருளினார்.

அண்ணாவும் ஒரு பிறவியிலே இருபிறவியுண்டானாற் போல் மகிழ்ச்சியுடன் உடையவர் திருவடிகளுக்கு அனந்தாழ்வானைப்போல், அந்தரங்கராய் ஸகல வியாக்கியன நிர்மாணங்களுக்கும் உசாத்துணையாய் ஜீயர் திருவடித் தாமரைகளில் ஸேவையே தாரகமாய் வாழ்ந்து கொண்டு ஜீயருக்கு உகப்பாய்ப் பெரிய பெருமாளையும் சேவித்துக்கொண்டு எழுந்தருளிறிருந்தார். அரிய அருளிச் செயற் பொருள்களை யெல்லாம் ஜீயரிடம் கேட்டு ஆதரித்துக் கொண்டிருந்தார். அண்ணாவுடன் அவருடைய பத்னி புத்ரர்களும் ஆசிரயித்தனர்.

## ப்ரதிவாதி பயங்கரர் என்று பெயர் வரக்காரணம்

ஸ்ரீநயநவரதாசார்யர் ஸ்வாமியினுடைய (வேதாந்தாசார்யருடைய திருக்குமாரர்) திருவருளாலே ந்ருஸிம்ஹமிச்ரன் என்னும் ப்ரசண்டா த்வைத பண்டிதரோடு வாதம் புரிந்து வெற்றி பெற்று அப்பண்டிதரைத் தமது சிஷ்யராக்கிக் கொண்டார். அதைக்கண்டு உள்ளம் பூரித்த ஸ்ரீநயநவரதாசார்யர் இப்போது நம் ராமாநுஜ தர்சனம் உம்மால் ஸம்ரசஷிக்கப்பட்டதனால் உமது புகழ் நீடூழி விளங்கக்கடவது. இனி முதலாக உமக்கு `ப்ரதிவாதி பயங்கரர்' என்ற பட்டம் நீடூழி விளங்கக்கடவது என்று மங்களாசாஸநம் செய்தார். அண்ணா அவருடைய ஜ்ஞாந புத்ரராக விளங்கினார்.

## ஸ்ரீஅண்ணாவிற்கு ஸ்ரீவைஷ்ணவதாஸன் என்கிற தாஸ்யநாமம் ஏற்படுதல்

மாமுனிகளின் பாதக்கமலங்கள் காணவேணுமென்னும் பேராசையோடே திருவரங்கப்பெருநகருக்குச் சென்று பெரியஜீயர் திருவடிகளிலே தெண்டன் சமர்பித்து நிற்க ஜீயரும் குளிர நோக்கி இவரைப் பற்றி விசாரிக்க இவரும் தன்னைப்பற்றி விரிவாக உறைத்து அடியேனை ஆட்கொள்ள வேணும் மென்ன ஜீயரும் `நீர் ப்ரதிவாதிபயங்கரர் நாம் ஸாது எங்கே கூடுகிறது' என்று சொல்ல அதற்கு அண்ணா அவர்கள் ப்ரஸித்த: பரகோஷ்டீஷு ப்ரதிவாதிபயங்கர: ஸ்ரீவைஷ்ணவாநாம் கோஷ்டீஷு தத்தாஸ இதி விச்ருத:' என்று விண்ணப்பம் செய்து `அடியேனை அப்படித் திருஉள்ளம் பற்றலாகாது. ஸ்ரீவைஷ்ணவதாஸனாகக் கொண்டருளவேணும் என்று ஆர்த்தியுடன் ப்ரார்த்திக்க, அதைக்கேட்ட மாமுனிகள் போரவுகந்து, அண்ணாவைப் பொலியக் கொண்டாடி `இனி உம்முடைய வம்ஸத்தார்க்கெல்லாம் ஸ்ரீவைஷ்ணவதாஸன் என்ற திருநாமமே ஸ்வருப நிருபகமான தாஸ்ய நாமமாகக்கடவது' என்று அருளிச்செய்தார்.

இங்ஙனே மணவாளமாமுனிக்கும் அண்ணாவுக்கும் ஆசார்ய சிஷ்ய க்ரமத்தைநோக்கி முன்னோர்கள் `வரவரமுநிமதாம் யாதே யதிராஜே ஸகலலோக ஜீவாதௌ/ ஸ்ரீவாதிபீகரோபூத் ஸ்ரீமான் ஸ்ரீவத்ஸ சிஹ்னமிச்ரோமபி' என்று அநுஸந்தித்தார்கள். அதாவது ஜகதாசார்யரான எம்பெருமானார் மணவாளமாமுனிகளாகத் திருவவதரித்தவாறே, கூரத்தாழ்வானும் அண்ணாவாக அவதரித்தார் என்று பொருள்.

## நாள் பாட்டு

எத்திசையும் புகழோங்கி வளர்ந்திட வந்து பிறந்திடுநாள்
ஏரணி கீர்த்தி எம்பெருமானார் தம் தரிசன மேய்ந்திடுநாள்
பக்தி விரக்திகள் பாங்கினி லோங்கிடப் பாரினை யுய்த்திடுநாள்
பாவனமாகிய பரமபதந்தனில் வாசல் திறந்திடுநாள்
முத்திதரும் நகரேழினில் சீரிய கச்சி விளங்கிடுநாள்
முன்னவரருளிய மொழிகள் விளங்கிட வீறு பெறுத்திடு நாள்
ஒத்த முடம்பைக் குலத்திலோர் சீரியவாதி பயங்கரனார்
உலகில் உதித்திடு நாள் திருவாடியில் புஷ்யமெனும் நாளே.

மாலைபுனைதோளான் மணவாளமாமுனிவன்
கோலம் மறவாத கொண்டலே - பாலமுதம்
என்னும் பரவாதி பயங்கர மண்ணனே
இன்னமொரு நூற்றாண்டிரும்.

## மங்கள ஸ்லோகம்

மங்களம் குருவர்யாய மங்களம் குணஸிந்தவே /
ஸ்ரீவாதி பீதிகரார்யாய நித்யஸ்ரீ நித்யமங்களம் //

பெருமாள் கோயில் ப்ரதிவாதி பயங்கரம் ஜகத்குரு ஸ்ரீகாதி அநந்தாசார்யார் ஸ்வாமி அருளிச்செய்த **ஆசார்யசர்யாம்ருதத்தின்** தமிழாக்கத்திருந்தும் மற்றும் முனைவர் இரா.அரங்கராஜன் ஸ்வாமி தொகுத்து அருளியுள்ள **மன்னுபுகழ் மணவாளமாமுனிவன்** நூலில் இருந்தும் எடுக்கப்பட்டது.

**ஸ்ரீபிரதிவாதி பயங்கரம் அண்ணா திருவடிகளே சரணம்.**

**வாசிக தோஷ: சஷந்தவ்ய:**